DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 451/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | ஜெயப்பிரியா |
|---|---|
| Father / Husband Name | சுகுமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 16.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்து மருத்துவர் வினோத்குமார் என்பவரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். தற்போது அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.07.2024 ம் தேதி மருத்துவர் வினோத்குமார் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 11.30 மணிக்கு பரத் என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் அவரது வீட்டின் அருகே 11.00 மணிக்கு கட்டிங்பிளேடால் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு வலது புறுவத்தின் கீழ் 7x3x1 cm அளவுள்ள கிழிந்த காயமும், தலையில் கன்றிய காயமும் இருந்தது. பின்னர் அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கியுள்ளார். **(மருத்துவர் வினோத்குமார் பரத் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**குறுக்கு விசாரணை**

2. அ.சா.ஆ.3 ல் கட்டிங்பிளேடால் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கரடுமுரடான பகுதியில் தவறி விழுந்தால் கூட மேற்படி காயம் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.